**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**CC. No. 213 /2019**

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி - 01 , திரு. சிவமுதலி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திரு.சிவமுதலி வயது

த.பெ/ க.பெ. : தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : சாதி :

மாவட்டம் :

**முதல் விசாரணை**

1) நான் சாத்தம்பாடியில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 04.07.2018 ம் தேதி காலை 11.00 மணியளவில் எனது கொல்லையில் நானும், எனது மனைவி அருகில் இருந்த பக்கத்து மூளை கொல்லையிலும் களை கொத்திக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரிகள் எங்கள் பாதையில்மண் கொண்டு செல்வது சம்மந்தமாக கேட்டு, எங்களுக்குள் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது, அதை மனதில் வைத்துக்கொண்டு, எனது பயிர் விளைவித்துள்ள கொல்லையில் உள்ள மண்ணை வெட்டி, ஆஜர் 1 வது எதிரி தனது கொல்லையில் போட்டார்.

2) நான் ஆஜர் 1 வது எதிரியிடம் ஏன் எனது கொல்லையில் உள்ள மண்ணை வெட்டுகிறாய், ஏற்கனவே இப்படித்தான் பிரச்சனை செய்தாய் என்று கேட்டபோது, ஆஜர் 2 வது எதிரி அவனை தேவிடியா மகனே அடிடா என்று சொன்னவுடன், ஆஜர் 1 வது எதிரி என்னடா தேவிடியா மகனே என்று திட்டி, மண் வெட்டிக்கொண்டிருந்த மண்வெட்டியால் சுழற்றி இடது பக்க தோள்பட்டையில் அடித்தார். அவர் அடித்ததில் எனது இடது தோள்பட்டையில் உள்ள மூட்டு இறங்கி, கை வீங்கி, எனக்கு மயக்கம் வருமாறு ஆகிவிட்டது.

3) எனது மனைவி சத்தம் கேட்டு, ஓடிவந்து, ஏன் எனது கணவரை அடிக்கிறீர்கள் என்று கேட்டார். அவரையும் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். ஊர்மக்கள் கூடிவிட்டு, என்னை அரியலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு மூன்று நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில்இருந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது, விக்கிரமங்கலம் போலீசார் வந்து விசாரித்தார்கள்.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ( **புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது, குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒம்/-இரா.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1

ஜெயங்கொண்டம்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**CC. No. 213 /2019**

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி - 02 , திருமதி.கண்ணகி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திருமதி.கண்ணகி வயது

த.பெ/ க.பெ. : தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : சாதி :

மாவட்டம் :

**முதல் விசாரணை**

1) நான் சாத்தம்பாடியில் வசிக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அசா1 எனது கணவர். ஆஜர் 1வது எதிரி ஏற்கனவே மண் அடிக்க எங்களிடம் பாதை கேட்டார். நாங்கள் கொடுக்காததால்,அந்த முன்விரோதம் காரணமாக, கடந்த 04.07.2018 ம் தேதி காலை 11.00 மணியளவில், எங்கள் கொல்லையில் எனது கணவர் இருந்தபோது, நான் மூளைக் கொல்லையில் இருந்தேன். ஆஜர் 1வது எதிரி எங்கள் கொல்லையில் உள்ள மண்ணை வெட்டி, அவர் கொல்லையில் போட்டார். அருகே அவர் மனைவியும் இருந்தார். அதை என் கணவர் ஏன் எங்கள் கொல்லையில் உள்ள மண்ணை வெட்டி உங்கள் கொல்லையில் போடுகிறீர்கள் என்று கேட்டார்.

2) நான் வெட்டி போடுவேன் நீ யாரு கேட்க, என்று ஆஜர் 1வது எதிரி என் கணவரை தேவிடியா மகனே, குச்சிகாரி மகனே என்றுதிட்டினார். நான் அவர் திட்டும் சத்தம் கேட்டு ஓடிப்போய் பார்த்தேன். ஆஜர் 1வது எதிரி என் கணவரை கையில் வைத்திருந்த மண்வெட்டியால் சுழற்றி இடது கை தோள்பட்டையில் அடித்தார். அதில் எனது கணவருக்கு தோள்பட்டையில் உள்ள மூட்டு இறங்கிவிட்டது. ஆஜர் 2 வது எதிரி அவனை விட்டு வைக்க கூடாது அவனை பிடி, அடி என்று சொன்னார்.

3) நான் சென்று கேட்டபோது, ஆஜர் 1வது எதிரி என்னையும் வாடி போடி என்று அசிங்கமாக திட்டினார். எனது கணவரை நான் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது கணவர் மருத்துவமனையில்

சிகிச்சையில் இருந்தபோது, போலீசார் வந்து விசாரித்தார்கள். எனது கணவர் மருத்துவமனையில் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது, குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒம்/-இரா.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1

ஜெயங்கொண்டம்.